## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI**

| | |
|---|---|
| Summary Trial Case No: | STC 209/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **ம.சா.1** |
| Name : | **சங்கரி** |
| Husband/Father Name: | **சரவணன்** |
| Village : | **அ.மேட்டூர்** |
| Taluk : | **வேப்பந்தட்டை** |
| Age : | 36/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.07.2023

**( எதிரி – பிரபு ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு –317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். அதில் உள்ள சங்கதிகள்அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். எதிரி கொடுத்த லட்சுமி விலாஸ் வங்கி 05.06.2019–ம் தேதியிட்ட திருச்சி Contonment கிளை ரூ. 9,20,500/–க்கான அசல் காசோலை எண் 000045–க்குரிய அசல் காசோலையை தாக்கல் செய்கிறேன். (அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி காசோலையை பேங்க் ஆப் இந்தியா, அரும்பாவூர் கிளையில் தாக்கல் செய்து அது 17.08.2019–ம் தேதி Account Closed என்ற காரணத்தால் திருப்பப்பட்ட வங்கி ரிட்டன் மெமோ அசலை தாக்கல் செய்கிறேன். (அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் அனுப்பிய 16.09.2019–ம் தேதியிட்ட அஞ்சலக ரசீதுடன் கூடிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். (அது **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல்

மறுத்து அனுப்பப்பட்டது. அதற்குண்டான திருப்பப்பட்ட கவரின் ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்கிறேன். எதிரி தரப்பில் நகல் குறியீடு செய்ய மறுத்ததன்பேரில் நகல் குறியீடு செய்வது நீதிமன்றத்தால் மறுத்து குறியீடு செய்யவில்லை. 16.09.2019–ம் தேதியிட்டு நான் எதிரி மீது காசோலை கொடுத்து மோசடி செய்ததற்காக நடவடிக்கை எடுக்கக்கோரி பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகாரின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். எதிரி தரப்பில் மேற்படி ஆவணத்தில் நகல் கொடுக்கப்படவில்லை என்று ஆட்சேபணை செய்யப்பட்டது. (ஆட்சேபணையுடன் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மனுவின்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. (i) எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்தி வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை :** இல்லை